# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | NOVEMBER 2023 | No. 11


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 138:1-8

1. உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.
2. உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.
3. நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்.
4. கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்.
5. கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள்.
6. கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.
7. நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.
8. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது. உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.

## உங்கள் போராட்டக்களத்தை பகுத்தறியுங்கள்!

**Rev. ஏஞ்சலின் செல்வகுமாரி**

## RECOGNIZE YOUR BATTLE FIELD!



வெகு காலமாக சந்திக்காத என் நண்பர் ஒருவரைச் சந்திக்க சமீபத்தில் என் குடும்பத்துடன் சென்றிருந்தேன். அந்த சந்திப்பைக் குறித்து மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டேன். அநேக புதிய சாலைகளும், மாற்று சாலைகளும் வழியில் காணப்பட்டதால், 'கூகுள் மேப்'ஜச் சார்ந்து அதன் வழிநடத்துதலின்படி போய்விடலாம் என்று நினைத்தேன். ஆனால் அந்த 'கூகுள் மேப்'ஆல் என்னைக் கொண்டு சேர்க்க முடியவில்லை. உள்ளதிலேயே சிறந்த வழியைத்தான் அந்த 'மேப்' காட்டியது. இருப்பினும் அந்த வழியிலும் ஏதோ குழப்பம் ஏற்பட்டு, நான் ஒரு வட்டத்திலேயே மீண்டும் மீண்டும் சுற்றிக் கொண்டிருந்தேன். எனக்கு நேரமும் தாமதமாகிக் கொண்டிருந்தது. என் பொறுமையை இழக்கத் தொடங்கினேன்.

இப்படிப்பட்ட அனுபவம் உங்களில் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்புகிறேன். போக்குவரத்து விளக்குகள் உள்ள ஓர் இடத்தில் நான் நின்றபோது, நேராகச் செல்வதா அல்லது 'கூகுள் மேப்' காட்டும் பாதையில் திரும்புவதா என்று திகைத்துக் காணப்பட்டேன். 'கூகுள் மேப்' காண்பித்த பாதை இடுக்கமானதாக இருந்தது. என்னால் என் வாகனத்தை அந்த இடுக்கமான பாதையில் ஓட்ட முடியுமா என்று யோசித்தேன். அப்பொழுது, எனக்கு தெளிவு உண்டாகும்படிக்கு என் முன்னே சென்றிருந்த இரு சக்கர வாகன ஓட்டியிடம் கேட்கத் தீர்மானித்தேன். அவர், நான் சேர வேண்டிய இடத்தில்தான் வசிப்பதாகவும், அவர் எனக்கு

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



REACHING NATIONS

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


HON. EDITOR - IN - CHIEF

Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

MANAGING EDITOR

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

GENERAL MANAGER

Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

ADMINISTRATION

Sis. Jesy Veena Sam
Bro. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

EDITORIAL BOARD

Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran



EDITOR, PUBLISHER & PRINTER

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

E.MAIL ID

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

YOUTUBE CHANNEL

Echo of His Call


**உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது - யூதா 1:2**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே!

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக. நீங்கள் நலமாயிருக்கிறீர்கள் என்று நம்புகிறோம். உங்கள் தேவைகளுக்காகத் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்.



சகோதரி சாஜினி செரியன்



சகோ. வில்லம் ஜாக்கோபஸ் பிரிடோரியஸ்

நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் கர்த்தரின் பரலோக ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். தேவன் நமக்கு சகோதரி சாஜினி செரியன் அவர்களை நமது **அழைப்பின் எதிரொலி** ஆங்கில பத்திரிகையின் துணை ஆசிரியராகவும், சகோதரர் வில்லம் ஜாக்கோபஸ் பிரிடோரியஸ் அவர்களை ஆப்ரிக்கான்ஸ் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் தந்துள்ளதால், தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். இவர்களையும், மற்ற 14 துணை ஆசிரியர்களையும், அவர்களது உதவியாளர்களையும் உங்களது ஜெபத்தில் நினைத்துக் கொள்ளுங்கள்.

**அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் மூலம் நடத்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகளைப் பற்றியும் நல்ல அறிக்கைகளை நாங்கள் பெற்று வருகிறோம். உலகமெங்குமுள்ள மக்களின் வாழ்க்கைகளை தேவன் சந்தித்து வருகிறார். தேவனது ராஜ்யத்தைக் கட்டும் பணியில் தேவன் எங்களையும் பயன்படுத்தி வருகிறார் என்று அறிந்து, அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

நாங்கள் ஏற்கனவே உங்களுக்கு எழுதியது போல, இந்நாட்களில் பலவித ஆவிக்குரிய யுத்தங்களின் வழியாகக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். எனவே, எங்களுக்காக ஜெபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எங்களுக்கு சாதகம் இல்லாத ஆவிக்குரிய சூழ்நிலையின் வழியாய் நாங்கள் கடந்து சென்றாலும் உங்கள் நலனுக்காக நாங்கள் விடாமல் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் நமது உலக அமைப்பு மாறிக்கொண்டே இருப்பதால், உலகமெங்குமுள்ள ஊழியர்களாகிய நமக்கு, சர்வ வல்ல தேவனின் விசேஷித்த தொடுதலும், பாதுகாப்பும் தேவைப்படுகின்றன. அப்பொழுதுதான் எங்கள் மேலுள்ள அபிஷேகத்தை இவ்வுலக மக்களுக்கும் பகிர்ந்தளிக்க முடியும். ஆவிக்குரிய யுத்த களத்தில் நாங்கள் முன் வரிசையில் இருக்கிறோம் என்றுதான் சொல்ல முடியும். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே எங்கள் தளபதியாகவும், பாதுகாவலராகவும் இருக்கிறார். புரிந்து கொள்ளுங்கள். ஆமென்.

கர்த்தர் உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Media Ministry Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

வழிகாட்டுவதாகவும் கூறினார். எனக்கு மிகவும் நிம்மதியாயிருந்தது! நான் அந்த இரு சக்கர வாகன ஓட்டியைப் பின்பற்றி போன போது எனது 'கூகுள் மேப்' இன் முறைமை, வேறு வழியைச் சொல்லிக் கொண்டே வந்தது. நானோ அதின் வழிகாட்டுதலை விட்டுவிட்டு, அந்த இருசக்கர வாகன ஓட்டியையே பின்பற்றினேன். ஏனென்றால், அவர்மேல் எனக்கு நம்பிக்கை வந்து விட்டது. அவர் அந்த வழியில் ஏற்கனவே சென்றிருந்த தால், அவருக்கு அந்த வழி நன்றாகத் தெரிந்திருந்தது. நமக்கு வழிகாட்ட யாராவது கிடைத்து விட்டால் எத்தகைய நிம்மதி நமக்கு கிடைக்கிறது!

உங்கள் வாழ்க்கையையும் நடத்துவதற்கு இவ்வாறாக யாரேனும் இருக்க மாட்டார்களா என்று நீங்கள் என்றாவது விரும்பியதுண்டா? மிகவும் கடுமையான மற்றும் குழப்பம் நிறைந்த சூழ்நிலைகளில் உங்களுக்காகத் தீர்மானங்களை எடுக்க ஒருவர் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அவர்களை மட்டும் நாம் பின்பற்றினால் போதுமே. உண்மையாகவே அப்படி ஒருவர் நமக்கு இருக்கிறார். அவர் பெயர்தான் இயேசு கிறிஸ்து. அவருக்கு நமது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் வருங்காலம் கூட தெரியும். நமது வருங்காலத்துக்குள் அவர் ஏற்கனவே கடந்து போயிருக்கிறார்! அவை நம்மிடத்தில் வருவதற்குள் அவருக்கு எல்லாம் தெரியும். இது ஏனென்றால், ... **அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே** என்று எபேசியர் 1:4 இல் எழுதியிருக்கிறது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகான திட்டத்தை வைத்திருக்கிறார். ... **நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே** எரேமியா 29:11.


நம் வாழ்வில் என்ன சம்பவித்தாலும், நம் சர்வ வல்ல தேவன் நமக்கென்று திட்டமிட்டவைகளுக்கு நேராய் நம் வாழ்க்கை கடந்து செல்லும். வாழ்வின் எல்லா அம்சங்களும் – நன்மையானவைகள், சவால்கள், நாம் விரும்பாதவைகள் அனைத்தும் அவர் திட்டத்திற்குள் அடங்கும்.

## 1. நல்ல போராட்டத்தைப் போராடு: நல்ல போராட்ட வீரனாயிரு, கவலைப்படுகிறவனாயிராதே!

சவால் நிறைந்ததாயும், நம்மை எதிர்த்து வருகிறதாயும், குழப்பம் நிறைந்ததாயும் இன்றைய சூழ்நிலைகள் காணப்பட்டாலும், இவை எல்லாம் நமது நன்மைக்கேதுவாகவே முடிவடையப் போகிறது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் போர் வீரர்களாயிருக்கும்படியாகவே தேவன் நம்மை அழைத்துள்ளார்; கவலைப்பட்டு கலங்குகிறவர்களாக அல்ல. வாழ்க்கையில் அடிக்கடி நடக்கும் சோதனைகள் நாம் விரக்தி அடைந்து, நம் வாழ்வின் நோக்கத்தைக் காண முடியாதபடி செய்து விடும். ஆனால் ஒன்றை நாம் மறந்து போகக் கூடாது. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்து, சிலுவையில் மரித்து, உயிரோடு எழுந்து, நித்திய வாழ்வு என்ற ஒன்று உண்டு என்று நமக்கு வெளிப் படுத்தியிருக்கிறார். இப்போதுள்ள இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. நித்திய வாழ்விற்கு இது ஒரு பயிற்சிக்களமாகவே பயன்படு கிறது. இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் அனுபவங்கள் **அவருடைய சாயலில் நம்மை மாற்றவே** சம்பவிக்கிறது (2 கொரிந்தியர் 3:18). பவுல் இவ்வாறாகக் கூறுகிறார்: ... **நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்....** 1 தீமோத்தேயு 6:12. ஆகவே, நாம் நல்ல போராட்டத்தைப் போராடவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக, நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்.** 1 தீமோத்தேயு 6:12.

இந்த உன்னத போராட்டத்தை எப்படி போராடுவது? இது விசுவாசத்தினால் மாத்திரமே சாத்தியமாகும். இந்த நீதியான போராட்டத்தை விசுவாசமில்லாமல் போராட முடியாது; போராடாமல் நித்திய ஜீவனைச் சுதந்தரிக்க முடியாது. நித்திய ஜீவனைக் குறித்த எண்ணம் இல்லையெனில் நாம் இங்கே வாழ்வதற்கு எந்த நோக்கமுமே இல்லை. **என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** என்று வேதம் சங்கீதம் 144:1 இல் அழகாகக் குறிப்பிடுகிறது. தேவனே நமது பயிற்சியாளரும், பரலோக சேனையின் தளபதியாகவும் இருந்து நம்மை யுத்தத்திற்கு ஆயத்தம் செய்கிறார். சேனைகளின் கர்த்தராய் இருந்து, நாம் நம் வாழ்வில் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள நம்மை பெலப்படுத்துகிறார். "கர்த்தராய் இருந்து, நாம் நம் வாழ்வில் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள நம்மை பெலப்படுத்துகிறார். **கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்** என்று யாத்திராகமம் 15:3இல் வாசிக்கலாம். அவரைப்போலவே நாம் யுத்தத்தில் வல்லவர்களாய் இருக்க அவர் விரும்புகிறார்; கவலை கொள்வதில் வல்லவர்களாக நாம் இருக்க அவர் விரும்புவதில்லை. திடன் கொள்ளுங்கள். எல்லாம் அறிந்த தளபதியின் வழிநடத்துதலின் கீழ் நாம் இருக்கிறோம். எனவே, நீங்கள் சோர்ந்து போய் போராட்டத்திலிருந்து விலகி விடாதீர்கள். நாம் போராடும் யுத்தம், நமது தளபதியால் ஏற்கனவே ஜெயிக்கப்பட்ட யுத்தம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். கல்வாரிச் சிலுவையில் நமது ஆண்டவர் வெற்றிச் சிறந்தார்.



என் விரல்களை யுத்தத்திற்கு படிப்பிக்கிற கர்த்தர்

## 2. போராடுவதற்கான ஆயுதங்கள்!

யுத்தத்தில் போராட, தேவன் நமக்கு வல்லமையுள்ள ஆயுதங்களைத் தந்திருக்கிறார். இந்த ஆயுதங்களைக் குறித்து 2 கொரிந்தியர் 10:4 இல் வாசிக்கிறோம்: **எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.** பாவம், அடிமைத்தனம், 'நாம் தோற்றுப் போனவர்கள்' என்ற எண்ணத்தைக் கொடுக்கும் தலைமுறை சாபங்கள் போன்ற எத்தகைய வலிமையான அரண்களாய் இருந்தாலும், இந்த ஆயுதங்களால் அவற்றை அழித்து விடலாம். ஒரே விதமான, மீண்டும், மீண்டும் தாக்கக்கூடிய வியாதியையோ அல்லது பிரச்சனைகளையோ உங்கள் குடும்பத்தில் வருவதைக் கவனிப்பீர்களானால், இந்த ஆயுதங்களைப் பயன்படுத்த நேரம் வந்து விட்டது என்று அறிந்து கொள்ளுங்கள். கல்வாரிச் சிலுவையிலே நமக்காகச் சிந்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஜெயத்தை அறிக்கை செய்யுங்கள். நமது வாழ்வில் வரும் போராட்டங்களை எதிர்த்து போராட தேவன் அருளும் ஆயுதங்களைப் பயன்படுத்த ஆரம்பிப்போம்.

## எல்லா போராட்டங்களையும் போராட அவசியமில்லை!

நம்மை எதிர்த்து வரும் எல்லா போராட்டங்களையும் எதிர்த்து நாம் போராட

தேவையில்லை என்பதை நாம் அறிய வேண்டும். முக்கியமான போராட்டத்திலிருந்து நம்மை திசை திருப்பவே சில போராட்டங்கள் வருவதுண்டு. ஞானத்தோடு நமது போராட்டங்களை நாம் தெரிந்தெடுக்க வேண்டும். தேவையில்லாத போராட்டங்களைப் போராடி உங்கள் சக்தியையும், நேரத்தையும், பெலனையும் வீணாக்காதீர்கள். நம்மை எதிர்த்து வரும் அனைத்துப் போராட்டங்களோடும் போராடிக் கொண்டிருப்போமானால் நாம் சீக்கிரமாக சோர்ந்து போய்விடுவோம். மட்டுமின்றி, கர்த்தர் நம்மை எதை எதிர்த்து போராட அழைத்துள்ளாரோ அதை நாம் அறியாமல் விட்டுவிடவும் வாய்ப்பு உள்ளது.

## உங்கள் அழைப்பு பெரிதானால், சவால்களும் பெரியவைகளே!

மிகப்பெரிய ஊழியத்துக்கு தேவன் உங்களை அழைப்பாரானால், அதை நிறைவேற்றாமல் தடுக்க பெரிய சவால்கள் உங்கள் முன் வரும். இருப்பினும், சவால்களை எதிர்ப்பதிலேயே உங்கள் கவனம் இருக்குமானால், அவற்றுக்குப் பின்னால் இருக்கும் ஆசீர்வாதங்களை நீங்கள் இழந்துவிடுவீர்கள்.

நாம் எல்லோரும் நன்கு அறிந்த 1 சாமுவேல் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற தாவீது – கோலியாத் கதை இந்த கருத்தை அழகாக வெளிப்படுத்தி காண்பிக்கிறது.

இஸ்ரவேலின் சேனைக்கு முன்பாக நின்று தன்னிடம் ஒற்றைக்கு ஒற்றையாக சண்டையிட கோலியாத் சவால் விட்டதை நாம் அறிவோம். அவன் 40 நாட்கள் சளைக்காமல் வந்து நின்று சத்தமிடவும் சபிக்கவும் செய்து இஸ்ரவேலருக்குள்ளே மிகுந்த பயத்தை ஏற்படுத்தினான். **இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள்** (1 சாமுவேல் 17:24).


ஆயினும், தாவீது அவனைக் குறித்து என்ன கூறினார் என்பதை 1 சாமு வேல் 17:26 இல் பார்க்கலாம்: ... **ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான்.** அந்த பெலிஸ்தியனுடைய வார்த்தைகளை தாவீதால் சகிக்க முடியவில்லை. தாவீதின் இந்த வார்த்தைகளை நாம் ஆராய்வோமானால், அவரது யுத்த யுக்தி என்னவென்பதை நாம் கவனிக்கலாம்.

ஒருவரையும் தன்னோடு பேச அனுமதியாமல், அவர் அந்த பிரச்சனையில், தேவனோடு மட்டும் தன்னைத் தொடர்பில் வைத்துக் கொண்டார். தாவீதின் பார்வையில், இந்த யுத்தம் அவருடையது அல்ல; அது தேவனுடையது.

அநேக நேரங்களில் நமது போராட்டங்களை நமது கைகளிலேயே எடுத்துக் கொண்டு போராடுகிறோம். வல்லமையுள்ள யுத்த பராக்கிரமசாலியாகிய கர்த்தரிடத்தில் நம் யுத்தங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று என் நண்பர்களாகிய உங்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். நாமே, தனிப்பட்ட விதத்தில் நமது பிரச்சனைகளைக் கையாள முயற்சித்து சோர்ந்து போய்விடுகிறோம். சோர்வடைவது மட்டுமின்றி, சில நேரங்களில் நமது விசுவாசத்தை விட்டே நழுவிப் போய் விடுகிறோம்.

## 3. எல்லாம் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது!

எனதருமை சகோதர, சகோதரிகளே! யுத்த களத்திற்கு தாவீதை தேவன் கொண்டுவந்ததிற்குப் பின்னால் ஒரு பெரிய திட்டம் வைத்திருந்தார். தாவீது, தான் தன் சகோதரர்களுக்கு உணவு கொண்டு போவதுதான் தன் நோக்கம் என்று நினைத்தார். ஆனால் தேவனுக்கோ வேறொரு தெய்வீகத் திட்டம் இருந்தது. தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக ஏற்படுத்துவதற்கு இது முதல் படியாகும். அப்பொழுது தாவீதுக்கு இது தெரியாது. அவருக்காக நம்ப முடியாத ஒரு



கோலியாத்துடன் தாவீதின் யுத்தம்

திட்டத்தையும், ஆசீர்வாதத்தையும் தேவன் வைத்திருந்தார். அதற்கு முன் அவர் ஒரு சவாலை, யுத்தத்தைச் சந்திக்க வேண்டும். நமது வாழ்க்கையிலும், பல விதங்களில் இவ்வாறே நடக்கிறது. நமக்கு வரும் போராட்டங்களையே நினைத்து காலத்தை வீணடித்து விடுகிறோம். நமக்கு வரவிருக்கும் ஆசீர்வாதங்களைக் கவனிக்காமல் விட்டு விடுகிறோம்.

யுத்தத்தில் கோலியாத்தை தாவீது சந்திப்பது தேவ சித்தமாயிருந்தது. தேவனது

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை
போதனா மொழி : தமிழ்
Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.
Diploma in Ministry : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்
Bachelor of Theology : மூன்று வருடங்கள்
கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதான கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 நவம்பர் 19 முதல் டிசம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

நவம்பர் 19 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் 2023–2024ம் வருட கல்வியாண்டின் முதலாவது பருவத்தை வெற்றிகரமாக நிறைவடையச் செய்த கிருபைக்காக...

நவம்பர் 20 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக...

நவம்பர் 21 ⇨ நமது மருத்துவ ஊழியத்தில் கர்த்தர் நடத்தி வரும் அற்புதங்களுக்காக...

நவம்பர் 22 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் ஞாயிறு ஆராதனை மற்றும் ஊழியங்கள் மூலமாக சந்திக்கப்படாத மக்களிடம் சுவிசேஷம் சென்றடைந்ததற்காக...

நவம்பர் 23 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

நவம்பர் 24 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்களை கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

நவம்பர் 25 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

நவம்பர் 26 ⇨ நமது ஊழியங்களில் ஈடுபாட்டுடன் தொடர்ந்து ஆதரவளித்து வரும் ஆதரவாளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 27 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** அலுவலக மற்றும் அச்சகப் பணியாளர்களுக்காகவும், அவர்களது ஊழிய ஈடுபாடுகளுக்காகவும்...

நவம்பர் 28 ⇨ நமது ஆங்கில பத்திரிகையின் புதிய இணை ஆசிரியையாக சகோதரி சாஜினி செரியன் அவர்களையும் மற்றும் ஆப்ரிகான்ஸ் பத்திரிகையின் இணை ஆசிரியராக சகோதரர் வில்லம் ஜாகோபஸ் பிரிட்டோரியஸ் அவர்களையும் தந்து ஆசீர்வதித்தமைக்காக ...

நவம்பர் 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப் ஊடக ஊழியங்கள் மூலமாக சந்திக்கப்படாத பகுதிகளில் சுவிசேஷம் பரவச் செய்த கிருபைக்காக ...

நவம்பர் 30 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் சிறுவர் ஞாயிறு பள்ளி மூலமாக அதிக குழந்தைகளை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக ...

டிசம்பர் 01 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவ பாதுகாப்பு அளித்து வரும் கிருபைக்காக...

டிசம்பர் 02 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** இரண்டாம் பருவத்தை அதிக மாணவர்களுடனும் உற்சாகத்துடனும் தொடங்கச் செய்த கிருபைக்காக...

டிசம்பர் 03 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் அனைத்து செயல்பாடுகளிலும் கர்த்தரின் கரங்கள் இருப்பதற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

டிசம்பர் 04 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க...

டிசம்பர் 05 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட...

டிசம்பர் 06 ⇨ உலகளாவிய அளவில் போதகர்களுக்கும் களப் பணியாளர்களுக்கும் தேவ பாதுகாப்பு அளிக்க வேண்டி...

டிசம்பர் 07 ⇨ பாலஸ்தீன மற்றும் இஸ்ரேல் நாடுகளி டையே நடைபெறும் போரின் பதட்டம் நீங்கி, அந்நாடுகளுக்குள் ஒற்றுமையும், சமாதானமும் திரும்ப வேண்டி...

டிசம்பர் 08 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்காக...

டிசம்பர் 09 ⇨ இளம் பருவத்தினரிடையே செயல்படுகின்ற தற்கொலையின் ஆவி நீக்கப்பட...

டிசம்பர் 10 ⇨ உலகளாவிய அளவில் புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரழிவு உண்டாகாமல் இருக்கவேண்டி...

டிசம்பர் 11 ⇨ அனைத்து சமயங்களின் ஒற்றுமைக்காக...

டிசம்பர் 12 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும்...

டிசம்பர் 13 ⇨ குடும்பங்களில் இளம் பிராயத்தினர் மற்றும் குழந்தைகள் வளர்ப்பில் பெற்றோர்களுக்கு தேவ வழிகாட்டுதல் கிடைக்க வேண்டி ...

டிசம்பர் 14 ⇨ உலகளாவிய அளவில் கிறிஸ்துவ ஊழியங்களில் எழுப்புதல் வரவேண்டி...

டிசம்பர் 15 ⇨ மணிப்பூர் மாநிலத்தில் அமைதியும், நல்லிணக்கமும் திரும்ப வேண்டி...

டிசம்பர் 16 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளின் விசுவாசிகளுக்கு தேவபாதுகாப்பும், நல்ல ஆரோக்கியமும் கிடைக்க வேண்டி ...

டிசம்பர் 17 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப் ஊடக ஊழியங்கள் மூலமாக ஏராளமானவர்கள் இரட்சிப்பிற்குள் வழிநடத்தப்பட வேண்டி...

டிசம்பர் 18 ⇨ இந்த தலைமுறையைச் சேர்ந்த இளம் பருவத்தினர் மற்றும் சிறுவர்களுக்காக ஜெபிக்கின்ற சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தில் ஏராளமான மக்கள் பங்கேற்க வேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

திட்டத்தின் ஒரு பகுதியாகவே அது இருந்தது. இருப்பினும், நம் வாழ்க்கையில் தேவ திட்டத்திலிருந்து நம்மை விலக்கும்படி சாத்தான் முயன்று கொண்டிருப்பான்.

## 4. திரும்பக் கற்றுக் கொள்ளுங்கள்!

வாஞ்சையோடும், வைராக்கியத்தோடும் தாவீது பேசிக் கொண்டிருக்கும் போது, அவருக்கு ஒரு சத்தம் கேட்கிறது. **அந்த மனுஷரோடே அவன் பேசிக் கொண்டிருக்கிறதை அவன் மூத்த சகோதரனாகிய எலியாப் கேட்டபோது, அவன் தாவீதின்மேல் கோபங்கொண்டு: நீ இங்கே வந்தது என்ன? வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்? உன் துணிகரத்தையும் உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்றான்.** 1 சாமுவேல் 17:28. தாவீது கர்வம் கொண்டவர் என்றும், தீய இருதயமுடையவர் என்றும், அவர் யுத்தத்தை வேடிக்கை பார்க்க வந்தார் என்றும் எலியாப் குற்றம் சுமத்தினான். இந்தப் பேச்சு கூர்மையானதாகவும், தாவீதின் இருதயத்தை வேதனைப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது.

தனது மூத்த சகோதரன் ஏன் தன்னை இவ்வாறாக நடத்துகிறான் என்றோ, ஏன் தன்மேல் இவ்வாறு குற்றம் சுமத்துகிறான் என்றோ தாவீதுக்குப் புரியாமல், **'நான் என்ன தவறு செய்தேன்?' என்று கேட்கிறார். எதற்காக அவருக்குப் பேசக்கூட அனுமதி கொடுக்கப்படவில்லை என்று கேட்டார். பின்பு, அந்த சூழ்நிலையை விட்டு திரும்பினார்** என்று வசனத்தில் (1 சாமுவேல் 17:29,30) குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வசனங்கள் மீண்டுமாக எனக்குள் ஒலிக்கிறது. ஏனென்றால், சில சமயங்களில், சில சூழ்நிலைகளை விட்டு திரும்பிவிட நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு போராட்டத்தையும் நின்று போராட நமக்கு அவசியமில்லை.

தாவீது அங்கேயே நின்று, தன் சகோதரனோடு வாக்குவாதம் செய்து, தன்மேல் தவறாய்ச் சொல்லப்பட்டவைகளுக்கு எதிராய்த் தன்னை நல்லவராக நிரூபித்துக் காட்டியிருக்க முடியும். அதற்கான உரிமை அவருக்கு இருந்தது. ஏனென்றால், பலரின் முன்பாக அவர் பழிசுமத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டிருந்தார். ஆனால், தாவீது இந்த போராட்டத்தைப் போராட விரும்பவில்லை. அவ்விடம் விட்டு அவர் கடந்து செல்லவே முடிவெடுத்தார்.

## 5. யுத்த களத்தில் வீணானவைகளைச் செய்யாதிருங்கள்!

சில அநாவசியமான சூழ்நிலைகளிலிருந்து விலகிச் செல்லும் ஞானத்தை தேவன் நமக்குத் தந்தருள்வாராக. எனதருமை நண்பர்களே! ஒரு மிகப்பெரிய நோக்கத்திற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். எதைச் செய்ய நீங்கள் அழைக்கப்பட்டீர்களோ, அதைச் செய்ய விடாமல் தடுக்க 'எலியாபின் வார்த்தைகள்' உங்களைத் தடுத்துவிடக் கூடாது. "எலியாபுக்களை" எதிர்த்து போராடுவதை விட்டு விட்டு, "கோலியாத்துகளை" எதிர்த்து போராடுவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நமது ஆண்டவருக்காக வாழ முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது தடைகளையும், எதிர்ப்புகளையும் சந்திக்க நேரிடுவது சகஜம்தான். இந்த தடைகள் எலியாபைப் போன்ற மக்கள் வடிவத்தில் வரலாம். அத்தகைய மக்களின் குற்றச்சாட்டுகளையும், எதிர்மறையான வாக்குகளையும் நாம் ஏற்றுக்கொண்டால், கர்த்தருக்காக நமக்கிருக்கும் உற்சாகம், அர்ப்பணம், வைராக்கியம் ஆகியவைகள் அணைந்துவிடும்.



தாவீதை கேள்விகேட்கும் எலியாப்

எலியாபின் குற்றச்சாட்டுகளை இப்பொழுது நாம் கவனிக்கலாம்:

**"நீ இங்கே வந்தது என்ன?"**

**"வனாந்திரத்திலுள்ள அந்த கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்?"**

**"உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன்."**

**"யுத்தத்தைப் பார்க்க அல்லவா வந்தாய்?"**

இந்த கேள்விகளுக்கெல்லாம் தாவீது பதிலளிக்கத் தொடங்கியிருந்தால், அவர் எலியாபுடன்தான் போராடிக் கொண்டிருப்பார். கோலியாத்துடன் போராடியிருக்க மாட்டார். யுத்த களத்திற்கு அவன் வந்ததின் நோக்கம்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


# முழுநேர இந்தி வகுப்புகள்
## நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

| | |
|---|---|
| Diploma in Ministry | : ஒரு வருடம் |
| Diploma in Theology | : இரண்டு வருடங்கள் |
| Bachelor of Theology | : மூன்று வருடங்கள் |

கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன். | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 18. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 19. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 20. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 21. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 22. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 23. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 24. இரவு ஜெபம் | – | 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 25. உபவாச ஜெபம் | – | மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 26. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 27. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 28. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 29. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## தேவன் செய்ய நினைத்தது ஒருபோதும் தடைபடாது!

1969–ஆம் வருடம் நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவுடன், மூன்று வருடகாலம், காலஞ்சென்ற அருமை தேவஊழியர் வருகையின் தூதன் பத்திரிகை ஆசிரியரான போதகர் எஸ். தேவதாசன் அவர்கள் என்னைத் தம்முடன் ஊழியத்தில் சேர்த்து எனக்குப் பல்வேறு விதங்களில் ஆவிக்குரிய ஊழியப் பயிற்சி அளித்தார்கள்.



**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & போதகர் எஸ். தேவதாசன்**

ஒரு முறை நான் அவர்களுடன் இரவு நேரத்தில் அதிக நேரமாக ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று என்னிடம் வருங்காலத்தில் உலகம் எப்படி இருக்கப் போகிறது என்பதையும், என்னைக் கொண்டு தேவன் என்னென்ன காரியங்களைச் செய்யப்போகிறார் என்பதையும் என்னிடம் விளக்கிக் கூறினார்கள். அவர்கள் என்னிடம் சொன்னக் காரியங்கள் எனக்கு மிகப் பெரியவைகளாயிருந்தன. அவற்றை நான் கொஞ்சம் கூட எண்ணிப் பார்க்கக்கூடாத நிலையில் அப்போது இருந்தேன். இவர்கள் சொன்ன காரியங்களுக்கு ஏற்ற கல்வித் தகுதியோ, பணபலமோ, ஆள்பலமோ என்னிடம் சற்றேனும் இல்லாதிருந்தது.

இப்படியாக என்னுடைய இயலாமைகளையும், என்னிடம் இல்லாதவைகளையும் அவர்களிடம் “ஐயா, நான் கடைசிவரை ஓர் அடித்தளத்தில் ஊழியம் செய்யும் கடைநிலை ஊழியனாக இருந்தால் போதும்” என்று எடுத்துச் சொன்னேன். அப்போது அவர்கள் ஒன்றுமில்லாத ஒரு மனிதனை மிக உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லத் தேவையான இரண்டு காரியங்கள் உள்ளன. அதாவது 1 தீமோத்தேயு 1:18 இல் சொல்லப்பட்டுள்ளபடி, நீ **விசுவாசமும் நல்மனச்சாட்சியும்** உடையவனாயிரு, இவை இரண்டையும் உன் இரண்டு கண்களைப் போல பாதுகாத்துக் கொள்வாயானால் நான் உன்னிடம் இப்போது சொன்ன அனைத்து ஆவிக்குரிய உயர்வுகளும் உனக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். நானும் இந்த இரண்டு காரியங்களிலும் என்னால் இயன்ற மட்டும் கவனமாயிருக்க தேவன் உதவி செய்தார்.

இந்தச் செய்தியை எழுதுவதற்கு சற்று நேரத்திற்கு முன் தேவன் என்னோடுப் பேசினார். அவருடைய மெல்லிய சத்தத்தை நான் கேட்டு தேம்பித் தேம்பி சத்தமிட்டு அழுதேன். அவர் என்னிடம், “என் மகனே இப்போது சற்று சிந்தித்துப் பார். நீ நிற்கும் இந்தக் கட்டிடம் உனக்கு எப்படிக் கிடைத்தது? இதில் இந்த நேரத்தில் நடக்கிற ஊழியங்களை நினைத்துப் பார். கட்டிடத்தின் தரைப் பகுதியில் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் இக்காலத்து தொழில் நுட்பத்தில் செயல்படும் எனது சுவிசேஷ அச்சகத்தைப் பார், முதல் மாடியில் எனது ஆலயத்தில் ஒரு புறத்தில் 24 மணி நேர ஜெப ஊழியமும், அடுத்தப் புறத்தின் ஒரு பகுதியில் **நெகேமியா வேதாகமக் கல்லூரி** வகுப்பும், மற்றப் பகுதியில் கல்லூரியில் படிக்கும் வாலிப ஆண், பெண்களுக்கான ஊழியமும், இரண்டாம் மாடியில் **அழைப்பின் எதிரொலி** ஊழிய அலுவலகமும் நடைபெறுவதை நீ சிந்தித்தது உண்டா?

உன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டக் காரியங்களை நிறைவேற்ற அவ்வப்போது, உனக்கு உதவி செய்ய விவேகத்திலும், யுக்தியிலும் உன்னைவிடத் தேறின ஆரோன்களையும், யோசுவாக்களையும் எழுப்பி உன்னை எவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கிறேன். இவற்றையெல்லாம் நீ சரியானபடி சிந்திக்கா விட்டாலும், நான் உன்மேல் சிந்தனையாயிருக்கிறேன். உன்னை நான் அழைக்கும் போது நீ எப்படி இருந்தாய்? இப்போது எப்படி இருக்கிறாய்? உன் மூலம் நான் நிறைவேற்றி வரும் ஊழியங்களின் எல்லைகளை இன்னும் நான் விரிவாக்குவேன். என் ஊழியக்காரர் போதகர் எஸ். தேவதாசன் உனக்குக் கற்பித்தப் படி, கடைசி மட்டும் உன்னுடைய **விசுவாசத்தையும், நல்மனச்சாட்சியையும்** காத்துக்கொள். உன் வாழ்க்கைப்பாதை கரடுமுரடும் கடினமானதாகவும் இருந்தாலும் சோர்ந்து போகாதே, உன்னை அழைத்தவர் நான் அல்லவா? நான் வாக்கினால் உன்னோடு உரைத்தவற்றை என் கரத்தினால் நிறைவேற்றுவேன். எதைக் குறித்தும் சோர்வடையாமல் திடமனதாயிரு, மகனே” என்று பேசினார்.

கர்த்தர் என்னோடு இருந்து செய்யும் காரியங்களை என்னால் புரிந்துக் கொள்ளவே முடியவில்லை. இந்தச் செய்தியைப் படிக்கும் என் சகோதரனே, சகோதரியே, **நீங்களும் உலகப் போக்கிலேப் போகாதபடி தேவன் உங்களை வைத்திருக்கிற தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிந்து, அடங்கி, விசுவாசத்துடனும், நல்மனசாட்சியுடனும் நடந்து கொள்ளுங்கள். அப்படியானால் நிச்சயமாகவே தேவன் உங்களைக் கொண்டும் மகாப் பெரிய காரியங்களைச் செய்வார். தேவன் உங்களைக் கொண்டும் செய்ய நினைத்த காரியங்கள் ஒருபோதும் தடைபடாது.** அவருக்கே மகிமையையும், கனத்தையும் செலுத்துகிறேன்.

*******

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

நிறைவேறாமலேயே போயிருக்கும். கோலியாத்துடன் போராட கர்த்தர் உங்களை அழைக்கும்போது, எலியாபுக்களுடன் போராடி உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். உங்கள் போராட்டங்களை ஞானமாய்த் தெரிந்தெடுங்கள். இந்த உலகத்தின் எலியாபுக்களோடு நமக்கு போராட்டம் இல்லை. நம் போராட்டங்கள் 'கோலியாத்துக்களுடன்தான்' **திரும்பிவிடக்** கற்றுக் கொள்ளுங்கள்.

## 6. முன்னோக்கி ஓடக் கற்றுக் கொள்ளுங்கள்!



எப்போது நாம் 'திரும்ப' வேண்டும். எப்போது நாம் முன்னோக்கி ஓட வேண்டும் என்று நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கோலியாத்துடன் போராட தாவீது யுத்த களத்துக்குள்ளே ஓடினார். எல்லாரும் கோலியாத்தை விட்டு திரும்பி ஓடும்போது, தாவீது அவனை நோக்கி ஓடினார். உங்கள் யுத்தங்களைத் தெரிந்தெடுக்க கற்றுக் கொள்ளுங்கள். உங்களை உற்சாகமிழக்க வைக்கும் வார்த்தைகள், குற்றச்சாட்டுகள், பொய்கள், அவமானங்கள் ஆகியவைகளைப் புறந்தள்ளி, உங்கள் அழைப்பில் கவனம் செலுத்துங்கள். உங்கள் வாழ்வின் நோக்கம் என்ன என்ற அறிந்து, அதை நோக்கி ஓடுங்கள். சோர்ந்து போய் விட்டு விடாதீர்கள்.

## 7. உங்கள் போராட்டங்கள் கர்த்தருக்கு நேராய் உங்களை ஓட விடட்டும்!

2 சாமுவேல் 16ஆம் அதிகாரத்தில், வயதில் மூத்த, முதிர்ச்சியடைந்த, ஆனால் தளர்ந்த தாவீதை நாம் காண்கிறோம். தன்னுடைய ராஜ்யத்தை அபகரித்துக் கொண்ட தன் மகனாகிய அப்சலோமிடமிருந்து தாவீது ஓடிக் கொண்டிருந்தார். ஓய்வெடுத்து, தன் பிள்ளைகளைச் சார்ந்து இளைப்பாறலாம் என்று நினைத்த வயதில், தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள அவர் ஓட வேண்டியதாயிருந்தது! சரீரப் பிரகாரமாகவும், மனதளவிலும், உணர்ச்சியிலும் அவர் மிகவும் சோர்ந்து போயிருந்தார். அந்த நேரத்தில், சவுலின் குடும்பத்திலொருவனான சீமேயி என்பவன் தாவீதுக்கு எதிரான தூஷணம் மற்றும் சாப வார்த்தைகளை சத்தமாகச் சொல்லி தூற்றினான்.

**சீமேயி அவனைத் தூஷித்து : இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப் பண்ணினார்; கர்த்தர் ராஜ்ய பாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக் கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் என்றான்.** 2 சாமுவேல் 16:7,8.

இஸ்ரவேலின் மக்களுக்கும், சவுலின் குடும்பத்தாருக்கும் எவ்வளவோ நன்மைகளைச் செய்த தாவீதுக்கு இதைக் கேட்டபோது, எப்படியிருந்திருக்கும் என்று உங்களால் கற்பனை பண்ண முடிகிறதா? தாவீதை அவன் 'கொலைகாரன்' என்றும் 'துரோகி' என்றும் குற்றம் சுமத்துகிறான். தாவீதின் வலியையும், வேதனையையும் என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. ஒருவேளை இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் சொல்லலாம். "இது என் வாழ்க்கையைப் போலிருக்கிறதே!" நான் எவ்வளவோ நன்மைகள் செய்திருந்தும் எனக்கு கிடைத்தது முறைகேடான வார்த்தைகளும், குற்றச்சாட்டுகளுமே. இதற்கு நான் தகுதியல்ல!"

தாவீதின் இடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும், சீமேயியை நோக்கி சத்தமிட்டு, சண்டைக்குப் போய் தங்களை நீதிமான்களாக்க முயன்றிருப்பார்கள். தாவீதின் மனுஷரில் ஒருவன் கூறுகிறான். ... **அந்தச் செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே என்றான்.** 1 சாமுவேல் 16:9. அதற்கு தாவீது ராஜா சொன்ன பதிலைக் கவனியுங்கள். தாவீது இங்கேயும் தன் பிரச்சனைகளையும், சவால்களையும் தேவனோடு இணைத்துக் கொள்கிறார். அவர் கூறினார், ... **அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதை தூஷிக்க வேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார்? ... ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார்**... 2 சாமுவேல் 16:10,12. 'நான் கடந்து செல்லும் இந்த வேதனைக்கு தேவன் ஒருநாள் எனக்கு நன்மை செய்வார்' என்று பொருள்பட தாவீது கூறினார்.

2 சாமுவேல் 16:11 இல் கர்த்தரே அவனைத் தூஷிக்கச் சொன்னார் என்றும், கர்த்தரே இதை அனுமதித்திருக்கிறார் என்றும் அவர் சொல்கிறதைப் பார்க்கிறோம். "கர்த்தர் அனுமதியாமல் என் வாழ்வில் எதுவும் நடக்காது. அவர் அதை அனுமதித்தாரானால், முடிவில் அதில் ஒரு ஆசீர்வாதம் இருக்கும்" என்ற நிச்சயம் நமக்கு வேண்டும்.

அருமை நண்பர்களே, நமது ஆண்டவராகிய இயேசுவே தனது போராட்டங்களைத் தெரிந்தெடுக்க வேண்டியிருந்தது. அவரைக் கேள்வி கேட்டபொழுது இயேசு கிறிஸ்து ஒருமுறை அமைதியாக நின்றார் என்று பார்க்கிறோம். அதேபோல, நாமும் அமைதியாக இருக்கக் கற்றுக் கொண்டு, கர்த்தர் நம் யுத்தங்களை நடத்த விட்டுவிட வேண்டும். நமது போராட்டங்களைத் தெரிந்தெடுக்க கர்த்தர் நமக்கு கிருபை அளிப்பாராக. தேவன் தேவனாக இருக்க அனுமதிப்போம்!

## இந்தி புத்தகங்கள் தேவை

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்காக** 1000 இந்தி கிறிஸ்தவ புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இந்தி வேதாகம புத்தகங்களை (Theological Books) சேகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்கவும்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

## தேவை
## நூலகப் புத்தகங்கள்

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும், நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கும்** உள்ள தனித்தனி நூலகங்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள் (Library Books) தேவைப்படுகின்றன. பழைய அல்லது புதிய புத்தகங்களை நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் அவற்றை எங்களுக்கு வழங்க விரும்பினால் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❁ வருட சந்தா ரூ. 100/– ❁ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th OCTOBER 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**